**Form No. 53 (C XXIII,. Cr.P.C)**

## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE–VI, PUDUCHERRY

**CC No. 674/2026**

**EXAMINATION OF PW1 (Lw 1)**

| | | |
|---|---|---|
| Name | : | யோகநாத் |
| Father/Husband's Name | : | பாலசுப்பரமணியன் |
| Address | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the **21st day of July 2026.**

**எதிரி ஆஜர்**

**சாட்சி சத்தியத்தின் மீது முதல் விசாரணை**

நான் வில்லியனூரில் வசிக்கிறேன். MBA படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் **புகார்** நான்தான் கொடுத்தது. அது **அ.சா.ஆ 1** ஆகும். ஆஜர் எதிரிமீதுதான் புகார் கொடுத்தேன். அவர் பெயர் உதயகுமார். கடந்த 08.10.2025 அன்று வில்லியனூர் ஜவகர் மேல் பள்ளி பின்புறம் உள்ள சிவகணபதி நபர் சாய்பாபா வீதி, எண் 5 கொண்ட எனது வீட்டில் இரவு சுமார் 2 மணிக்கு ஆஜர் எதிரி வந்து எனது R15 பதிவு எண் PY 05 VB 9884 என்ற வண்டியை கட்டையால் அடித்து உடைத்தார். பின்னர் 2.30 மணியளவில் எனக்கு போன் செய்து என்னை வெளியே வரச்சொல்லி எனது வீட்டின் கேட்டை உடைத்தார். எனது அப்பா அம்மா, என் தங்கை தேவி ஆகியோர்கள் என்னை வெளிய போகவேண்டாம் என்று தடுத்தார். அவர் கேட்டை அடித்து

கேட்டு எனது இடது கையில் பட்டு காயம் பட்டது. அதற்காக மருத்துவமனை எங்கும் செல்லவில்லை, அபிஷேகப்பாக்கம் சென்று நாட்டு வைத்தியம் செய்தேன். பட்டியல் சாட்சி 3 எனது எதிர் வீட்டை சேர்ந்தவர். பட்டியல் சாட்சி 4 எனது பக்கத்துவீட்டுகாரர். சங்கர் என்பவரையும் எனது அப்பாவையும் போலிசார் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவ தினம் அன்றே வில்லியனூர் அரசு மருத்துவமனைக்கு 3 மணியளவில் சென்றிருந்தேன். அங்கு சண்டை நடந்ததை பற்றி கூறினேன். அங்கு கையில் கட்டையால் அடித்தார்கள் என்று கூறினேன். புகாரை நான்தான் எழுதி கொடுத்தேன். என்ன காரணத்திற்காக ஆஜர் எதிரி அவ்வாறு செய்தார் என்றால் இதற்கு முன்பு எனது நண்பரிடம் சண்டை போட்டு இருந்தார். அதில் நான் இல்லை அதனால் இரவு என்னிடம் சண்டை போட்டார். ராஜேஷ், தர்மா ஆகியோர்களிடம் வில்லியனூர் ஆரியபாளையத்தில் சண்டை போட்டுள்ளார், எத்தனை மணிக்கு சண்டை போட்டார் என்று தெரியாது. ஆஜர் எதிரி ராஜேஷ் மீது அந்த சண்டை தொடர்பாக வழக்கு தொடுத்துள்ளார் அது நிலுவையில் உள்ளது. அந்த சண்டையை தொடர்ந்து வேறு எந்த பிரச்சனையும் எங்களிடம் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

புகாரில் வண்டிக்கு என்ன சேதாரம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 2 மணிக்கு வண்டியை உடைத்தை நான் நேரில் பார்க்கவில்லை. சி.சி.டி.வி பதிவில் அதை பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த சி.சி.டி.வி பதிவை புகாரில் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான், காவல் நிலையத்தில் காண்பித்தேன். 2.30 மணிக்கு போன் செய்ததாக போன் நம்பரை புகாரில் இணைத்துள்ளேனா என்றால் இல்லை. பின்னர் 2.30 மணியளவில் எனக்கு போன் செய்து என்னை வெளியே வரச்சொல்லி எனது வீட்டின் கேட்டை உடைத்தார். எனது அப்பா அம்மா, என் தங்கை தேவி ஆகியோர்கள் என்னை வெளிய போகவேண்டாம் என்று தடுத்தார். அவர் கேட்டை அடித்து கேட்டு எனது இடது கையில் பட்டு காயம்

பட்டது என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லாமல் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதிகாலை 3 மணிக்கு காவல் நிலையத்தில் சொன்று வாய்மொழியாக சொன்னேன். பின்னா் காலை 10 மணியளவில் புகார் அளித்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் புகார் அளிக்கவில்லை என்றும், பின்னிட்டு புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது நண்பர்கள் அவரை அடித்துவிட்டார் என்று தொடுத்த வழக்கு CC 1069/2026 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சம்பவம் இந்த வழக்கு சம்பவத்திற்கு 5 நாட்கள் முன்பு நடந்தது என்றால் சரிதான். உடைந்ததாக சொல்லப்படும் வண்டியின் ரசீதை காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சேதமான தொகையை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எனது நண்பா் மீது புகார் கொடுத்துள்ளார் என்பதால் நான்தான் 07.10.2025 மாலை 5.30 மணி, 9 மணி, 08.10.2025 விடியகாலை 1 மணிக்கு எதிரி வீட்டில் வசலில் கத்தியால் எதிரி குடும்பத்தை மிரட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது 24.06.2026 அன்று குற்ற எண் 258/2026 வழக்கு நான் பசங்களுடன் சேர்ந்து ஆஜர் எதிரி குடும்பத்தை கத்தியால் மிரட்டியதாக என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி என் நண்பர் மீது கொடுத்த புகாரை வாசபஸ் பெறுவதற்காக நடக்காத சம்பவத்திற்கு பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் சொன்ன நேரம், தினம், காயம்பட்ட இடம் அனைத்தும் மாறுதலாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் எந்த அடியும் படவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கை சமாதானமாக முடிக்க போடப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பின்னிட்ட தினத்தில் வேறு எங்கே காயத்திற்கோ அல்லது வலிப்பதாக பொய் கூறி எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Form No. 53 (C XXIII,. Cr.P.C)**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE–VI, PUDUCHERRY**

**CC No. 674/2026**

**EXAMINATION OF PW2 (Lw 2)**

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்பரமணியன் |
| Father/Husband's Name | : | கோபால் |
| Address | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the **21st day of July 2026.**

**எதிரி ஆஜர்**

**சாட்சி சத்தியத்தின் மீது முதல் விசாரணை**

நான் வில்லியனூர் சிவகணபதி நபர், சாய்பாபா வீதி, எண் 5 என்ற விலாசத்தில் வசிக்கிறேன். நான் ஓட்டுநர் வேலை செய்கிறேன். அ.சா 1 எனது மகன். நானும் அவரும் தான்புகார் கொடுத்தோம். எனது மகனின் வண்டியை 08.10.2025 அன்று இரவு 2 மணியளவில் எனது வீட்டு வாசலில் இருந்த R15 வண்டியை ஆஜா் எதிரி தடியால் அடித்தது உடைத்ததால் புகார் கொடுத்தோம். நானும் எனது மகனும் வெளியே வந்து பார்த்த போது ஆஜர் எதிரி ஓடிவிட்டார். அவர் வண்டியை உடைத்ததை தவிர்த்து வேறு எதுவும் செய்யவில்லை. எனது மகன் மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் இல்லை. வண்டியின் டூம் மற்றும் பக்க பகுதிகள் அடித்து உடைத்து வண்டி உடைக்கப்பட்ட நிலையில் இருந்தது. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

போலிசார் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார்கள். சங்கர் எனது எதிர் வீட்டில் வசிப்பவர், பழனி எனது பக்கத்து வீட்டில் வசிப்பர். இருவரையும் போலிசார் விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கட்டையை வைத்துதான் ஆஜர் எதிரி வண்டியை அடித்து உடைத்துள்ளார். அந்த **புகைப்படம் சா.பொ 1** ஆகும். என்ன காரணமாக இது நடந்தது என்றால் ஆரியபாளையத்தில் பசங்களுக்குள் பிரச்சனை நடந்ததால் இது நடந்தது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையில் தற்போது முதல் விசாரணையில் கூறியதைதான் சாட்சியாக சொன்னேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கேட்டை அடித்து உடைத்தார். அதற்கான கேமரா பதிவு என்னிடம் உள்ளது. ஆஜர் எதிரி எனது வீட்டில் எந்த வண்டியும் அடித்து உடைக்கவில்லை என்றும் எனது மகன் மீது எனது மகனின் நண்பர் மீது உள்ள வழக்கை வாப்பஸ் பெறுவதற்காக கொடுக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. வண்டியின் சேதாரம் ஆன விவரத்தை போலிசார் விசாரணையிலும் எனது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான், வழக்கறிஞரிடம் சொன்னேன். காவலர்கள் 3 மணிக்கு வரவில்லை, நாங்கள்தான் உடைந்த பொருட்களை புகைப்படம் எடுத்து சென்றோம். காவலர்கள் அந்த இடத்தில் வந்த போது கட்டையை காண்பித்தோம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் வண்டியை யாரும் உடைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வாக்குமூலமும் தற்போது நான் கூறுவதும் முன்னுக்குபின் முரனாக உள்ளது என்றால் சரியல்ல. எனது மகன்தான் அவர் நண்பர் மீது போடப்பட்ட புகாரை வாபஸ் வாங்க வேண்டி ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது குடும்பத்தாரை மிரட்டினார் என்றால் சரியல்ல. அ.சா1 எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உடைக்காத வண்டியை உடைத்ததாகவும் வெளியே வரும்போது அவர் ஓடிவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.